அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் இல. 206

எனது இல. 2/9/277(எச்)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1982, ஓகஸ்ட் மாதம் 12 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் யாப்பில் வம்சாவழிப் பிரசைகளுக்கும் பதிவுவழிப் பிரசைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடின்மை.

---

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் யாப்பின் Vஆம் அதிகாரத்தின் 26(2)உம், 26(3)உம் பிரிவு பின்வருமாறு :-

" 26(2) ஒரு பிரசைக்கு வம்சாவழியினால் அல்லது வம்சாவழிச் சட்டத்திற்கு இணங்கப் பதிவினால் பிரசாவுரிமை கிடைத்திருப்பினும் அப்பிரசையை சகல நோக்கங்களுக்காகவும் இலங்கைப் பிரசையாகவே விவரிக்கப்படலாம்.

26(3) அந்நிலைமை எடுத்தவாறு குறித்து, வம்சாவழிப் பிரசை அல்லது பதிவிற் பிரசை என எந்த நோக்கத்திற்காகவும் இலங்கைப் பிரசைகளுக்கிடையில் வேறுபாடுகாணலாகாது."

02. எனவே அரசாங்க சேவையில் வெற்றிடங்களை நிரப்புதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது விண்ணப்பதாரரின் பிரசாவுரிமை வம்சாவழி மூலம் அல்லது பதிவினால் பெறப்பட்டது என்னும் கேள்விக்கு இடமளிக்கலாகாது.

ஒப்பமிட்டவர்: டி.பி.ஜ.பி.எஸ். சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.